**செ.கு. எண்: 15** **நாள் : 24.03.2015**

**<u>மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மருத்துவர் சி. விஜயபாஸ்கர் அவர்களின் அறிக்கை</u>**

தமிழகத்தில் காசநோய் திட்டத்தின் மாநில அலுவலராக பணியாற்றிய மருத்துவர் ஜே. அறிவொளியின் துரதிஷ்டவசமான மரணத்தைப் பற்றி சில அரசியல் கட்சித் தலைவர்கள் முற்றிலும் தவறான செய்திகளை பத்திரிகைகளிலும் சமூக வலைத்தளங்களிலும் பரப்பி வருகிறார்கள்.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் தமிழக அரசு ***மக்கள் பணியே மகேசன் பணி*** என்ற உணர்வோடு செயல்பட்டு, மருத்துவ சேவையில் மிகச் சிறப்பாக செயல்படும் முதன்மை மாநிலங்களில் ஒன்றாகவும் இந்திய அளவில் முன்னோடி மாநிலமாகவும் திகழ்கிறது. மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் தரமான மருத்துவ சேவையை உறுதி செய்யும் வகையில் **மாண்புமிகு அம்மா** அவர்களின் அரசு அல்லும் பகலும் அயராமல் பாடுபட்டு வருகிறது.

வட இந்தியாவில் பெருமளவில் உயிர்பலி வாங்கிய பன்றிக்காய்ச்சல் ஆகட்டும், கொசுக்களினால் பரவும் டெங்கு காய்ச்சல் ஆகட்டும், தமிழக அரசு **மாண்புமிகு அம்மா** அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் மூலம் முழு முனைப்போடும், துடிப்போடும் செயல்பட்டு பன்முக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் மூலமாக தமிழகத்தில் இத்தொற்று நோய்களை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

குறை கூற வழியில்லாமல் செயல்பட்டு வரும் தமிழக அரசின் மீது வீண்பழி சுமத்தி, புழுதி வாரி தூற்றும் எண்ணத்துடன், ‘மக்கள்’ ஆதரவற்ற

கட்சித் தலைவர்கள் சிலர் மற்றும் மக்களால் நிராகரிகப்பட்ட 'முக'வரி இல்லாத சிலரும், அதிகாரியின் மரணத்தை அரசியலாக்கி குழப்பம் விளைவித்து அதன் மூலம் அரசியல் ஆதாயம் அடைய மனப்பால் குடித்து வருகின்றனர். இவர்களின் எண்ணம் ஒரு நாளும் ஈடேறாது.

இப்பொருள் குறித்த உண்மை நிலையினை மக்கள் மன்றத்தின் முன் வைக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

- மருத்துவர் ஜே. அறிவொளிக்கு 2014 பிப்ரவரி 22 ந்தேதி சென்னை அப்பல்லோ மருத்துவ மனையில் எடுக்கப்பட்ட Biopsy–ல் புற்றுநோய் மிகவும் முற்றிய நிலையில் (Adenocarcinoma Grade IV) இருந்தது கண்டறியப்பட்டது.
- மேலும் கோவை மெடிக்கல் சென்டரில் 2014–ம் ஆண்டு மே மாதம் எடுக்கப்பட்ட PET Scan–ல் உணவு குழாய் புற்றுநோய் (Oesophageal Cancer) மற்ற பாகங்களுக்கும் பரவி இருந்தது உறுதி செய்யப்பட்டது.
- இதனைத் தொடர்ந்து, அவருக்கு 2014–ம் ஆண்டு மே மாதம் 15– ந்தேதி கோயம்புத்தூரிலுள்ள வேதநாயகம் மருத்துவமனையில் புற்று நோய்க்கான அறுவை சிகிச்சை (Laproscopic / Thorocoscopic Oesophagectomy with Cervical Anastomosis) டாக்டர் செந்தில்குமார் என்ற மருத்துவரால் மேற்கொள்ளப்பட்டது.
- தொடர்ந்து புற்றுநோய் மருந்தியல் (Chemotherapy) மற்றும் புற்றுநோய் கதிர்வீச்சு சிகிச்சையும் (Radiotherapy) மேற்கொள்ளப்பட்டது.
- மேற்கண்ட தொடர் சிகிச்சைக்குப் பின்பு, 30.01.2015 அன்று சென்னை அப்போலோ மருத்துவமனையில் எடுக்கப்பட்ட PET Scan–ல் மருத்துவர் ஜே. அறிவொளி அவர்களுக்கு உணவுக்குழாய் புற்றுநோய் மிகவும் முற்றி

மூளை, வயிறு மற்றும் உடலின் மற்ற பகுதிகளுக்கும் பரவியது உறுதிபடுத்தப்பட்டது. இந்நிலையில் மருத்துவர் ஜே. அறிவொளி அவர்கள் 16.2.2015 அன்று கடலில் மூழ்கி மரணமடைந்தார் என்ற செய்தி வெளியானது.

இந்நிகழ்விற்கு முன்னதாக காசநோய் பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் 687 பணியிடங்களை மாவட்ட அளவில் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி சம்பள விகிதம் உயர்த்தப்பட்டதாலும், நீலகிரி மாவட்ட காசநோய் அலுவலர் மீது புகார்கள் எழுந்ததாலும் மாவட்ட அளவில் பணிநியமனம் என்ற நிலையை மாற்றி, மாநில அளவில் இப்பணியிடங்களை உரிய விதிமுறைகளின்படி ஒளிவுமறைவற்ற முறையில் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் (Written Test and Interview) நிரப்புவதற்கான விளம்பரம் செய்தித்தாள்களில் முறையாக வெளியிடப்பட்டு எழுத்து தேர்வுகள் 28.2.2015 மற்றும் 1.3.2015 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டன. விடைத்தாள்கள் திருத்தும் பணி முடிவடைந்ததும், விதிகளின்படி நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு பணியாளர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

உண்மை நிலை இவ்வாறிருக்க, மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சார்ந்த ஒரு அதிகாரியின் மரணத்தை, அதுவும் புற்றுநோயால் தீவிர பாதிப்பிற்கு உள்ளான மருத்துவரின் துயர மரணத்தை பணியாளர் தேர்வுடன் தொடர்புபடுத்தி அவரது குடும்பம் மற்றும் சுற்றத்தினர் உணர்வுகளைக்கூட கிஞ்சித்தும் மதிக்காமல் பொறுப்பற்ற முறையில் சுய விளம்பரத்திற்காக திரித்து அறிக்கை வெளியிடுவது மக்கள் செல்வாக்கு இல்லாத தலைவர்களுக்கு அரசியல் பிழைப்பாக உள்ளது.

பணியாளர்களை தேர்வு செய்யும் முதல் கட்டப்பணிகள் கூட இன்னமும் முழுமையடையாத இந்த நிலையில், பணி நியமனத்தின் பொருட்டு அழுத்தம் கொடுக்கப்பட்டதுதான் அதிகாரியின் இறப்புக்கு காரணம் என்ற வகையில் சில

அரசியல் கட்சித் தலைவர்கள் பத்திரிக்கையின் வாயிலாகவும் சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் முற்றிலும் உண்மைக்கு புறம்பான தகவல்களை மிகவும் பொறுப்பற்ற முறையில் மலிவான அரசியல் விளம்பரம் தேடி பரப்பி வருவதை என்னும் பொழுது **வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ** என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

குடும்பத் தலைவரை இழந்து வாடும் இத் தருணத்தில், துரதிஷ்டவசமாக மரணமடைந்த அதிகாரியின் நிகழ்வை மையமாக வைத்து அரசியல் ஆதாயம் தேட முற்படும் ஒரு சில தலைவர்களின் செயல், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்கு ஒப்பாகும். மக்களால் ஏற்கனவே புறக்கணிக்கப்பட்ட இவர்களின் **இந்த ஈனச் செயலை இறந்து போன அதிகாரியின் ஆன்மா கூட கண்டிப்பாக மன்னிக்காது!**

உண்மைத் தன்மையை மறைத்து உள்நோக்கத்துடன் தவறான செய்திகளை திட்டமிட்டு பரப்பி வரும் அரசியல் கட்சித்தலைவர்கள் மீது குற்றவியல் மானநட்ட வழக்கு தொடர அரசு முடிவு செய்துள்ளது என்பதையும் இத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு அம்மா** அவர்களின் சீரிய வழிகாட்டுதலோடு சிறப்பாகச் செயலாற்றி வரும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு **மடியில் கனமில்லை வழியில் பயமில்லை** என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மரு. சி. விஜயபாஸ்கர்,
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.